# ஜனவிநோதினி.

# Janavinodini.

A POPULAR MAGAZINE

OF

AMUSING AND INSTRUCTIVE INFORMATION
IN TAMIL.

(ILLUSTRATED.)

## Vol. VII.

Madras:
PUBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR
LITERATURE SOCIETY, AND SOLD AT THEIR
DEPOSITORY, OLD COLLEGE.

1876.

# CONTENTS.


| | Pages. |
|---|---|
| Advantages of Travel, the | 84 |
| An old King and his three Daughters. 134, 167, | 181 |
| Benefits which India has derived from her connexion with England, the | 110 |
| Brief account of the East India Museum, a | 213 |
| Conceited People | 104 |
| Dangers of Ignorance, the | 76 |
| Dependence of men upon each other | 267 |
| Difficulties of Emigrants, the | 33 |
| Excellence of Knowledge, the | 209 |
| Faraday or the Blacksmith's Son. 203, 235, | 268 |
| Few Words about Glass, a | 139 |
| Fits of evil passions, on | 16 |
| Going to the Bad | 107 |
| Honesty under difficulties | 27 |
| H. R. H. The Prince of Wales' departure from India | 93 |
| Imperial assemblage at Delhi | 274 |
| Intoxicating Drugs | 66 |
| Jamsetji Jeejeebhoy, Sir Bart | 56 |
| Labour as an Agent of Production | 291 |
| Laws of Health.— | |
| Cleanliness | 212 |
| Disease of the Body often causes Disease of the Mind | 278 |
| Healthy houses-Air-Water-Drainage | 78 |
| How is the Air out of doors kept pure? | 162 |
| How does Exercise help the Blood to circulate? | 176 |
| How is the blood exposed to the air? | 40 |
| How is the blood sent through every part of the body? | 64 |
| How to keep the Blood pure and healthy | 125 |
| Mischief of Tight Clothing | 260 |
| Warmth of the Body | 210 |
| When is Cold dangerous? | 240 |
| Why do we breathe? | 11 |
| Magnificence of the Court of Akbar, the ...244, 263 | 284 |
| Migration of Indian Fables, the | 154 |
| Miscellaneous.— * | |
| Buddhist Temples in Ceylon | 227 |
| Crocodile Hunting | 97 |
| H. R. H. Princess Beatrice | 277 |
| Ice and the Arctic Regions | 1 |
| Norway and its Scenery | 201 |
| Parsees of Bombay, the | 123 |
| Rhinoceros, the | 171 |
| Tartary | 253 |
| Temple near Trichinopoly, | 55 |
| Temple of Srirangam, the | 149 |
| Town Hall, Bombay | 25 |
| Monkey Bridge, a | 158 |
| Modern Education for Girls | 165 |
| Modesty | 121 |
| Murad the Unlucky ...188, | 218 |
| News- 24, 50, 96, 122, 148, 174, 200, 225, 252, | 304 |
| Old Deccan Days —a Magician 255 | 296 |
| Occupation, on | 82 |
| Old Sultan, —a Story, | 87 |
| Practical Hints for the Sick room | 3 |
| Spider and the Bee, the | 13 |
| Spider, the | 52 |
| Swan, the | 7 |
| School of Agriculture | 198 |
| Tales of Ten Princes, 18, 47, 89, 142, | 249 |
| The proper use of Time, on | 194 |
| Three Questions, the | 187 |
| Three Victims of Envy, the | 44 |
| Truthfulness in business | 228 |
| Udasini:—An Indian Romance, | 196 |
| Vice of Lying, the | 179 |
| Wages | 30 |
| Waters of the Globe, the | 73 |
| What is Wealth? ...131, | 150 |
| Within or Above your Means | 98 |
| "With Brains, Sir" | 61 |
| Without Care | 129 |
| World of Business.-An Allegory, the | 232 |


* The papers under this head are all illustrated by first class Engravings.

# பொருளடக்கம்.


பக்கம்.

அக்பரிகள் ... 104
அதிர்ஷ்டஹீனனான மூர்த் ... 188, 218
அறிவின் சிறப்பு ... 209
அன்னப்பறவை ... 7
இக்காலத்துப் பெண்கள் கற்கும் கல்வி ... 165
இந்தியாவுக்கும் இங்கிலாண்டுக்கும் உண்டான சம்பந்தத்தாலாயபயன்கள் ... 110
உதாவீலி—(ஒரு புதுக்கதை) ... 196
உத்தியோகம் அல்லது தொழில் ... 82
ஒரு பிராமணனும் அவன் மூன்றுபெண்களும் 134, 167, 181
ஒரு செல்வன்பிள்ளை கதை ... 203, 235, 268
கிலியோபத்திரா (ஒரு நீதி கதை) ... 232
கலியுகம் ... 129
கிழச்சுல்தான் கதை ... 87
குரங்குப்பாலம் ... 158
கெட்டுப்போகுதல் ... 107
கோபதாபமடையப்பற்றிச் சில புத்திமதிகள் ... 16
சமாசாரம் 24, 50, 96, 122, 148, 174, 200, 225, 252, 305
சிலந்திப்பூச்சி ... 52
சிலந்தியும் தேனீயும் ... 13
சரீரசாஸ்திர விஷயம் —
- உடைகளை வலிந்து உடுப்பதின் தீமை ... 260
- குளிர்ச்சி செய்விப்பது எப்போ? ... 240
- சரீரசோபால் மனசோபுண்டாகும் ... 278
- சீரத்துக்கிசைந்த குடு ... 210
- சுத்தத்தைப் பற்றி ... 212
- தேகத்தில் ரத்தம் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் இருக்கும் வகை ... 125
- தேகப்பயிற்சியால் ரத்தம் எங்கும் பாவுதலெப்படி? ... 176
- நாம் சுவாசம் விடுவதேன்? ... 11
- ரத்தம் சுத்தப்படுவதெப்படி? ... 40
- ரத்தம் தேகமெங்கும் எவ்விதமாய்ப் பாய்கின்றது? ... 64
- வீட்டுலவு ... 78
- வீட்டுக்கு வெளியில் ஆகாயம் எப்படி சுத்தமாயிருக்கின்றது? ... 162

ஸர் ஜம்ஷெட்ஜீ ஜீஜீபாய் ... 56
டில்லியில் கூடும் ராஜ சபை ... 274
தக்காணத்துப் பூர்வகதைகள்—மந்திரவாதி. 255, 286
தசகுமாரசரிதம் ... 18, 47, 89, 142, 249
திரவியமென்பதென்ன? ... 131, 150
தொழிற்துறைகளில் உண்மைதவறாமை ... 228
நாகரீகதேசத்தில் குடியேறுபவர் படும் பாடு ... 33
நோயாளிகளை நடத்தும் வகை ... 3
பலவிஷயத் திரட்டு *
- கல்யாணி ... 175
- சிம்மளத்தீவிலுள்ள புத்தர்தேவாலயங்கள் ... 227
- ஸ்ரீரங்கம் ... 149
- தார்த்தாரிய தேசம் ... 253
- திரிசிரபுரத்திற்கு அருகிலுள்ள தேவாலயம் ... 51
- நாகதேசம் ... 201
- பம்பாய் நகரத்துச் சபாமண்டபம் ... 25
- பம்பாய்ப்பட்டணத்து பாரஸீகர் ... 123
- பனிக்கட்டி ... 1
- மகாராணியாரவர்களின் அருமைகள் ... 277
- முதலைவேட்டை ... 97

பயிர்த்தொழில் பாடசாலை ... 198
பனிவரையைப்பற்றிய சில குறிப்புகள் ... 139
புத்தியின் சிறப்பு ... 61
பூமண்டலத்திலுள்ள ஜீவசமூகங்கள் ... 73
பொய்சொல்லுதலைப்பற்றி ... 179
பொருளை விளைவிக்கும் கருவி—உழைப்பு ... 291
பொறாமை பேயபிடித்த மூடகதை ... 47
மகிமைதங்கிய நமது இராசாவாகளுடைய நற்போக்கு ... 93
மடமையின் தீமைகள் ... 76
மயக்கவஸ்துக்கள் ... 69
மனிதர்களுக்குள்ள பரஸ்பர சம்பந்தம் ... 267
மூன்றுவிருக்கள் ... 187
மொகலாய அரசனாகிய அக்பர் பாதுஷா சமஸ்தானத்தின் சிறப்பு ... 244, 263, 284
ராத்திரியின் பயன ... 84
லண்டன் நகரத்தில் வைத்திருக்கும் இந்துதேசத்து விநோதக்காட்சிசாலையின் வரலாறு ... 213
வயதுக்கேற்ற வாழ். (சிறுபிள்ளைகளின் கதை.) ... 98
வறுமையிலும் நீதிதவறாமை ... 27
வாழ்க்கையின் வீண்போக்கானை ... 194
விநயம் அல்லது அடக்கமுடைமை ... 121
வெளித்தேசம்போன இந்தேசத்துக் கதைகள் ... 154
வேதனம் அல்லது கூலி ... 30


* இதற்கடியிலுள்ள விஷயங்களைப்பற்றிய பத்திரங்கள் படங்களோடு பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

# ஜனவிநோதினி.

இல. 1.] ஜனுவரி௴ 1876. [புஸ்த. VII.

## பனிக்கட்டி.

தண்ணீர் உறைந்தால் பனிக்கட்டியாகின்றதென்பது அனேவர்க்கும் நன்றாய்த் தெரிந்ததுதான். திரவமானநீர் அதிக குளிர்ச்சியால அடையாய்க் கட்டிப்போகின்றது. அதைததான் நாம் பனிக்கட்டியென்கிறோம். அந்தக கட்டியை நாம் கண்ணெதிரே பிடித்துபபார்த்தால் பளிங்குபோல் ஒளிவீசும். இதனால் தண்ணீருக்கும் பனிககட்டிக்கும் உள்ள வேற்றுமை நமக்கு நன்றாய்ப் புலபபடுகிறது. ஒன்று வெப்பமானது, மற்றொன்று குளிர்ச்சியானது. இந்தத் தண்ணீரென்னும் ஒரேவஸ்து பனிககட்டியாய் மாறுவதுந்தவிர இன்னொருவிதமாய் மாறுவதையும் நாம காணலாம். முன்னொரு சஞ்சிகையில சொல்லியிருக்கிறபடி அதிக வெப்பமானால் தண்ணீர் ஆவியாய்விடுகிறது.

நமது தேசம் அதிக உஷ்ணதேசமானபடியால் இதில் பனிக்கட்டி அதிகமாயுண்டாகிறதில்லை. அதிகமான குளிர்ச்சியுள்ள சில தேசங்களில்மாததிரம் பனி அநேக அடி ஆழம் ஊறித் தோய்ந்துபோயிருக்கும். அதிசீதமான தேசங்களில் சமுத்திரததினடுவே பனிக்கட்டித்தீவுகள் அநேகம் காணபபடுகின்றன. அவை ஒவ்வொருகாலங்களில் உடைந்து மெதக்கத்தலைப்படும். இநதப் பனிக்கட்டித்தீவுகள் பனிமலையென்றும் சொல்லப்படும்.

இப்படித் தண்ணீர் கட்டியாய்க் கட்டிக் கடல்களினடுவில் திட்டுத்திட்டாய் இருப்பது எவ்வளவு ஆச்சரியமானது? கட்டியான தண்ணீர் திரவமானநீரில் மெதக்கின்றதே! அநதத் தீவுகள் வெகு பெரிதாயுமிருக்கும். பத்துப்பதின்மூன்று மைல்வரையில் சில பாவியிருக்கின்றன. அப்படிப் பதின்மூன்று மைல்தூரம் பாந்து தெப்பம்போல் பனிக்கட்டி மெதப்பது எப்படியிருக்குமோ சற்று யோசித்துப்பார்!

ஜலத்தைவிடப் பனிக்கட்டி லேசானது. இல்லாவிட்டால் அது தண்ணீரில் எப்படி மெதக்கமாட்டும்; பனிக்கட்டியின்நிறை தண்

னீரின் நிறைவில் ஏழிலொருபங்கு குறைந்தது. பனிமலை கள் வெகுபாகம் தண்ணீருக்குள் அமிழ்ந்திருக்கும். மேலே எவ்வளவு புலப்படுகிறதோ அதைப்போல ஆறுபங்கு உள்ளே அமிழ்ந்திருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தப் பனிமலைகள் கப்பல்களுக்குப் பெரும்பகையாளிகள். இராக்காலங்களில் அதிவேகமாய்ப்போகையில் பனிமலையில் அடிபட்டு உடைந்து மூழ்கிப்போன மரக்கலங்கள் எண்ணிறந்தவை. அதனால் கப்பலோட்டிகள் அதன்மேலேயே கவனமாய்ப்போவார்கள். மேலும் அவர்கள் பனிமலைகள் சமீபத்திலிருக்கின்றனவோ என்னவோவென்று அடிக்கடி ஜலம் அதிகுளிர்ச்சியாயிருப்பதும் வெப்பமாயிருப்பதும் ஒருவகைக் கருவியால் ஆராய்ந்துகொண்டே போவார்கள். அந்தப் பனிமலைகள் கடலில் மெதந்துபோகும் விதத்தைப் பக்கத்துப்படத்தில் காணலாம். இந்தப் படத்திலிருக்கும் பனிமலைச் சிகரத்துக்குமேல் சூரியப்பிரபைபோன்ற வில்வடிவான ஒளிவட்டம் வடகடலையடுத்த உத்தரதுருவத்திற்குச் சமீபத்திலுள்ள சீததேசங்களில் தோன்றும் ஒரு சிறந்த கண்காட்சியாம். இதைப் பூமத்தியரேகையையடுத்த நமதுதேசத்தில் காண்பதரிது. இதற்கு அரோரா பொரியாலிஸ் என்று இங்கிலீஷ் பாஷையில் பேர்கூறுகின்றனர்.

பனிக்கட்டியின் உபயோகத்தை நாட்டார் எப்போதாவது கேட்டதுண்டோ? இங்கே அதன் உபயோகத்தைக் கொஞ்சம் சொல்லுகிறேன். மிகவும் உரத்த கற்களை உடைப்பதற்கு, மனிதர்களையும் மற்ற ஆயுதங்களையும்விட இந்தப் பனிக்கட்டியே சிறந்த கருவியாம். அது எப்படி உடைக்குமென்கிறீர்களோ? தண்ணீர் திரவமாயிருக்கும்போது அதற்கு எவ்வளவு இடம் வேண்டுமோ அதைவிடப் பனிக்கட்டியாகும்போது அதிக இடம்பிடிக்கும். ஆதலால் பூமியிலாவது கற்பிளவுகளிலாவது வீழ்ந்த தண்ணீர் தோயும்போது பரவ இடமில்லாமையால் தானிருக்கும் கல்முதலியவைகளைப் பிளந்து அவ்விடத்தில் உறைகின்றது. இப்படி ஜலமுறையும்போது வெகு பலமாய் உறைகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு இருப்புப்பாத்திரத்தில் தண்ணீரைவிட்டு நன்றாய்மூடி அந்நீரைத் தோயச்செய்தால், அப்போது அந்தப் பாத்திரம் வெடித்து வெகுதூரத்திற்கு அப்புறம் போய்விழும்.

உஷ்ணகாலங்களில் நமது உணவுகளைக் குளிர்ச்சியாக்குவதற்கும் போசனங்களுக்கு உருசியுண்டாக்குவதற்கும் பனிக்கட்டி உபயோகமாகின்றது. சிறிய பனிக்கட்டித்துண்டை ஒரு புட்டித் தண்ணீரில் போட்டுவைத்தால், அது உருகுமளவில் அந்த நீரைக் குளிர்ச்சியாய் வைத்திருக்கும். தாபச்சுரம்முதலிய சில நோய்களுக்குப் பனிக்கட்டி மிக்க உபயோகமான ஔஷதம். சீததேசங்

களில், வெகுதூரமானவிடங்களுக்கு யாத்திரைசெய்ய இந்தப் பனிமலைகள் பெரிய வாராவதியாயிருக்கின்றன.

ஆதலால் பனிக்கட்டி மிக்க உபயோகமானது. அது சுலபமாய்க் கிடைப்பது அரிது. அதை யந்திரத்தினால் செய்துவருகிறார்கள். ஒருநாளைக்குப் பத்து டன் நிறையுள்ள பனிக்கட்டி செய்யும்படியான யந்திரம் உண்டாயிருக்கிறது.

பனிக்கட்டியைக் கம்பளங்களில் கட்டிக்கொண்டுபோகிறார்கள். அது உருகாமல் அப்படியேயிருக்கிறது. இதென்ன வேடிக்கை பாருங்கள்? அதெப்படியாகும்? நமது தேஹத்தில் சூடு உண்டாவதற்கென்றோ நாம் கம்பளத்தைப் போர்த்துக்கொள்ளுகிறோம்? அது மெய்யே. கம்பளம் சூட்டை உண்டாக்குகிறதென்பதில்லை. நமது தேஹத்திலுள்ள உஷ்ணமும் சீதமும் வெளியேபோகவொட்டாமலும் வெளியேயிருப்பது உள்ளே வரவொட்டாமலும் காப்பதே அதன்குணம். ஆதலில் பனிக்கட்டியின்மேலும் வெளியிலிருக்கின்ற சூடு உறைக்கவொட்டாமல் காக்கின்றது. ஆதலின் இது நியாயமே. இத்தன்மையான பனிக்கட்டி நமது தேசத்தில் ஒவ்வொரு காலங்களில் மழைபெய்யும்போது வானத்திலிருந்து விழுவதை நாம் காணலாம்.

## நோயாளிகளை நடத்தும் வகை.

நோயாளிகளை நடத்தும்வகைகளில் தேர்ச்சிபெறவேண்டுமென்று கருத்துடையவர்கள் முதலில் தங்களுடைய நடத்தைகளும் மனோபாவமும் தாங்கள் நோயாளிகளிடத்தில் செய்யவேண்டிய செயலுக்குததக்கவையோ அல்லவோ என்பதை நன்றாய் ஆலோசிக்கவேண்டும். அருவருப்பும் வெறுப்பும் அடையத்தக்க தன்மையுடையவர்களும், சாந்தமில்லாதவர்களும் ஒருபோதும் அந்தத் தொழிலுக்கு உதவமாட்டார்கள். ஆதலால் அப்படிப்பட்டவர்கள் அந்த எண்ணததை ஒருபோதும் கொளளக்கூடாது. எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எம்மாதிரி குணமுளளவர்களாயிருந்தாலும், தங்களுடைய வாழ்நாளில் இரண்டொருதடவையாவது, தாங்கள் நோயாளிகளண்டைபோய்த் தங்களாலியன்றமட்டும் அவர்களுக்கு உதவமுயல்வது உலகவழக்கம். வெகுவாய் அனேவரும் தங்களுக்கு அசாததியமாயினும் நோயாளிகளை நடத்தும் சுமையைத் தம்தலையில் போட்டுக்கொள்வார்கள். தங்களுக்கொன்றும் தெரியாமல் அந்தக் காரியங்களில்மாத்திரம் விசேஷமான ஆஸ்தையோடு தலையிட்டுக்கொள்ளுகின்றவர்கள் எங்கேயோ சிலர்

தான். நோயாளிகளுக்கு உயிர்த்தோழர்களாய் இருப்பவர்களே அதிக ஆதரவுகொண்டு செம்மையாய் உபசாரஞ்செய்யத் தொடங்குகிறார்கள். அதனால் அவனுக்கு அதிகமாய்த் தொந்தரை உண்டாகின்றதேதவிர நன்மை விசேஷமாயுண்டாகிறதில்லை. அதன் பிறகு அந்த ரோகத்தைத் தீர்ப்பது வைத்தியர்களுக்குக்கூட அசாத்தியமாய்ப் போகின்றது. இவைகளுக்கெல்லாம் காரணம், அவர்கள் தங்களுக்கு ஒன்றும் பழக்கமில்லாமலிருக்க, எல்லாம் அறிந்தவர்போல் துராபிமானங்கொண்டு மூன்றுகிடக்க ஒன்றாய்ச் செய்வதுதான்.

அவரவர்களுடைய தேகக்கூறுபாடுகளையும் தற்காலநிலைமையையும் நன்றாயறியாமலும், அந்தந்த ரோகிகள் அனுபவிக்கும் அனுபவத்தைச் செம்மையாய்ப் பாராமலும் அவர்களுக்கு ஆதரணை செய்ய ஆரம்பிக்கிறார்கள். அதன்பிறகு, நமது தலைவிதிதவறாமல் பிராணாந்தமான உபாதி பலமாய் நேர்ந்துவிட்டால், அப்போது அனைவரும் கண்ணைப்பிசைந்துகொண்டு பயந்து ஸ்தப்தமாய் நின்றுவிடுவார்கள். இவ்விதமான துக்கச்செய்திகள் லக்ஷோபலக்ஷம் இப்போது நாம கண்டுவருகிறோம். தன் பிள்ளை பாயில் படுத்துக்கொண்டு பிராணனுக்கு மன்றாட அதுகண்டு தாய்தந்தையர்கள் கண்ணுங்கண்ணீருமாய் நிற்பது எத்தனை! தன்னை நிமிர்ந்து கண்ணெடுத்துக்கூடப் பார்க்கமாட்டாமல் கணவன் குற்றுயிராய் அல்லாட மனைவிகள் மனநொந்து நிற்பதெத்தனை! இத்தன்மையான சோகச் செய்திகளை நினைத்தால், நமது மனமும் அதற்குட்பட்டு தைரியங்குலைந்து பலவீனப்படுமென்பதற்குச் சந்தேகமுண்டோ? ஆதலால் வியாதியை விலக்குவிக்கவேண்டுமென்று வாஸ்தவமான விருப்பமுள்ளவர்கள் அடக்கமும், அமைதியும், பொறுமையும் தைரியமும் பெற்று, பிணியாளிகளைப் போற்றும்விதங்களையும், அவர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களையும் கொஞ்சம்தூரமாவது நன்றாய்க் கற்றுணர்ந்திருக்கவேண்டும். மேலும் ரோகிகளுக்கு அப்போதைக்கப்போது தேஹத்திலுண்டாகிற உபாதிகளை நன்றாய்த் தவறாமல் ஆராய்ந்து அறியத்தக்க தன்மையுடையவர்களாய் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள்தாம் தங்களால் இயன்றமட்டும் நோயாளிகளுக்கு உதவலாம். அப்படி இரண்டுமூன்றிடங்களில் தங்களுக்குத் தெரிந்த உபாயங்களை உபயோகித்துக் கைகூடியபிறகு அவர்கள் தங்களுக்கு நோயாளிகளை நடத்தும்வழி தெரியுமென்று நினைக்கலாம். அப்படியே சிலர் சித்திபெற்றிருந்தாலும், அவர்கள் அனுபவத்தில் தேர்ந்தவர்களென்று சொல்லக்கூடாது. பலவிடங்களில் பரிசோதியாமல் அனுபவத்தில் தேர்ச்சியுண்டாகுமோ?

உலகத்தாரனைவரும் தங்கள் தேஹத்தில் மிகவும் அற்பமான தலைநோய்முதலிய உபாதிநேர்ந்தாலும், அதற்குக்கூட அனுபவஞ்

கையை எதிர்பார்த்திருப்பது எவ்வளவு குறைவாயிருக்கிறது? அப்படியிராமல் ஒவ்வொருவரும் எளியநோய்கள் உண்டாவதற்குக் காரணம் இன்னின்னதென்பதும் அவைகளைத் தீர்க்கும் உபாயங்கள் இவையென்பதும் அறிந்திருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும். வைத்தியசாஸ்திரத்தில் அனைவரும் பண்டிதராயிருக்கவேண்டுமென்று இப்போது நாம் சொல்லவரவில்லை. தங்களநுபவத்தினாலேயே தமது தேகக்கூறு இப்படிப்பட்டதென்று தெரிந்துகொண்டு அதற்குதத்கவை இவையென்பதும தகாதவை இவையென்பதும் அறிந்து தக்கவைகளை உபயோகித்துத் தகாதவைகளை நீக்கிவருவார்களாயின் உலகத்தில் வியாதிகள் விசேஷமாய் ஏன் உண்டாகும்? விதிவசத்தால் ஒருகால் சம்பவித்தாலும் அவை எளிதில் நீங்கிவிடுவதாயிருக்க, அவ்வழிதெரியாமையாலும் உபேக்ஷையாலும அவைகளை வளர்த்துகிறார்கள். அது கடைசியில் பிள்ளையார்பிடிக்கக் குரங்காய் முடிகிறது. ஒருவன் இருமலினாலும் மார்நோயினாலும் வருந்தினால் அது இத்தன்மைத்ததென்று தெரியாமல் அவன் தலைக்கீழ் அதிக குளிர்ச்சியான தலைக்கணையைக்கொண்டு வைக்கிறார்கள். சவுக்கியமுண்டாகவேண்டுமென்றே அக்காரியஞ்செய்கிறார்கள். ஆயினும் அது அந்நோயை அதிகமாக்குகின்றது. இப்படி அறியாமையால வளருகிற நோய்களுக்கு அளவில்லை.

அநேகர் நோயாளிகளை நடத்தத்தெரியாமல் தனக்குத்தானே கெடுதிசம்பாதித்துக்கொள்ளுகிறார். நோயாளிகளண்டைபோய் சிச்சிருஷை செய்கிறவர்கள் அதிக ஆடம்பரமான ஆடைகளுடன் அவர் முன்னிலையில்போய் நிற்கக்கூடாது. அவர்கள் தேஹம் ஸ்வாதீனமில்லாமல் புதுகிப்பிரமைபிடித்து வீழ்ந்திருக்கிறவேளையில், படாடோபத்துடன் எதிரேபோய் நின்றால், உடனே திகில்பிடித்துப் பற்பலவிதமான கெட்டகனவுகள் தோன்றத்தலைப்படும். அப்படிப்பட்ட வேளைகளில் மதிமயங்கிப்போனால் அது மறுபடி திரும்பமாட்டாது. அக்காலங்களில் வியாதிக்காரர் கண்ணுக்கு ஒன்றும் உள்ளபடி தோன்றாது. நாம் உரப்பாய் அடிவைத்து நடந்தாலும், உரத்துப்பேசினாலும் அவர்களுக்குத் தலைநோயுண்டாகும். அவர்கள் படுத்திருக்கும் இடத்தில் வழககமாய்ப் போகிறவர்கள் ஒழியப் புதிதாய்க் கண்டவர்களும் போய் அலட்டக்கூடாது. அவர்களைத் தொட்டுதாங்குகிறவர்கள் கண்டபடி ஈரக்கையும் அழுக்குக்கையுமாய்ப் போய் உபசரிப்பதனால் அநேகவிதமான உபாதிகள் உண்டாகும். இச்சாயலான செயல்களை அற்பமென்று அநாதரித்து நகத்தால் கிள்ளுவதைக் கோடரியால் வெட்டும்படி ஆக்கிக்கொள்ளுகிறார்கள்.

வாந்திபேதிமுதலிய கடுநோய்களில் அவஸ்தைப்படுகின்றவர்களுக்குக் கூரமிருக்குமிடத்தில் எந்தக்காரிய நடத்தாலும் நன்றாய்த்-

தெரியும். யாராவது தம்மருகில் பேசினாலும் சரி, வேலைசெய்தாலும் சரி, அவைகளை அறியவேண்டுமென்னும் ஆவல் அவர்களுக்கு அதிகம். அவர்களண்டை அனைவரும்போய்க் கொசகொசவென்று பேசுவதனாலேதான் அவர்களுக்கு அதைக் கேட்கவேண்டுமென்று விருப்பமுண்டாகின்றது. ஆதலால் அப்படிப்பட்டவர்களண்டை பேசவேண்டுமென்றால், தெளிவாய் அவர் காது கேட்கும்படி உரத்துப்பேசவேண்டும். சந்தடி செய்யக்கூடாதென்றிருந்தால், அவர்கள் படுத்திருக்குமிடத்திலாவது பக்கங்களிலாவது ரகசியப்பேச்சென்பதே கூடாது.

இன்னும் சில சங்கதிசொல்லுகிறோம். அதைக் கேட்பது யாருக்கும் வருத்தமாயிருக்கும். ஆனால் அது மிக்கவுபயோகமானது. ரணவைத்தியம் செய்யவேண்டியிருந்தால் அச்சமயத்தில் அமைதியும் தன்னடக்கமுமில்லாதவர் அருகிலிருக்கக்கூடாதென்று அதிகமாய் வற்புறுத்திச்சொல்லக்கூடவில்லை. அக்காலத்தில் அவர்கள் சமீபத்திலிருந்தாலோ சிகிச்சைசெய்வது வைத்தியர்களுக்குக் கூடாமற்போகின்றது. ஏனெனில், அந்தச் சிகிச்சை விசேஷமாய் நோவை உண்டாக்குவதாயிராவிடினும், அந்தப் பிணியாளி அதைப்பற்றிய சிந்தை ஒன்றுமில்லாதவனாய் அசையாமலிருக்கவேண்டும். அப்படிப்பட்டவிஷயத்தில் கண்டவர்களும் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தால் அந்த ரணத்தை உபாயமாய்க் கொஞ்சங் கீறுவதற்குமுன்னமே பக்கத்தில் நிற்பவர் மூக்கைச் சிந்தி கண்ணைப்பிசைந்து புலம்பப் புறப்படுகிறார்கள். அதைக் கேட்டால் நோயாளி திடுக்கிட்டு அசைகிறான். அப்புறம் உடனே நிவர்த்திசெய்யக்கூடுகிறதில்லை. காலதாமதமாய் உபாதி பலமாகின்றது. ஆதலால் அத்தன்மையானவர்கள் நோயாளிகளண்டையிருக்கக்கூடாது.

அருவருப்பும் கூச்சமும் மனநெகிழ்ச்சியுமில்லாமல் எப்படிப்பட்ட காரியத்தையும் தைரியமாய்ச் செய்யத்தகுந்தவர்களே நோயாளிகளை உபசரிக்க உதவுவார்கள். அருவருப்புண்டாக்கத்தக்கவை எதைப்பார்த்தாலும் அவர்களுக்கு மனதில் கலக்கமுண்டாகாமலிருக்கவேண்டும். வைத்தியர் சொல்லுவதைத் தடையில்லாமல் நடத்தத்தகுந்தவர்களாயிருக்கவேண்டும். உபயோகமில்லாத வீண் கேள்விகள் கேட்கக்கூடாது. வைத்தியர் சொல்லுவதிற் சந்தேகமுங்கூடாது. அப்படிப்பட்டவர்கள்தாம் பிணியாளிகளுக்குத் தக்க உதவியாவார்கள். இப்போது நாம் கண்டவிடங்களில் இருப்பவர் எப்படியென்றால், வைத்தியர்சொல்லுவதைச் சரியாய்க் கேட்கிறதில்லை. தங்கள் மூடபுத்திக்குத் தோன்றிய வீண் ஆக்ஷேபங்களையெல்லாம் ஆக்ஷேபிக்கிறது. வைத்தியர் சொல்லிவிட்டுப் போனதையும் சரியாய் நடத்துகிறதில்லை. இத்தன்மையானவர்கள்

நோயாளிகளண்டை வரக்கூடுமோ? எவ்விதத்திலாவது அவர்களைக் கிட்டவரவொட்டாமல் நீக்குவதே நல்லது. சிலர், நோயாளிகள் பசித்துத் தவிக்கும்போது சோறிடுகிறதில்லை. சோற்றில் அபேக்ஷையில்லாதபோது தின்னும்படி பலவந்தஞ்செய்கிறது. பக்கத்திலிருந்து அவர்களைத் தாங்கவேண்டிய காலத்தில் கூவின குரலுக்கு ஏனென்று காத்திராமல் தமக்குத் தோன்றினபடி போய்விடுகிறது. அவர்கள் அயர்ந்து படுத்திருக்கும் காலத்தில் சமீபத்திற்சென்று தலைவேதனைசெய்கிறது. இத்தன்மையான துர்க்குணங்கள் அநேகருக்கு உண்டு. இவ்விதமான குணமுள்ளவர்கள் அத்தொழிலுக்கு உதவார்கள்.

இப்போது நாம் சொல்லுவது கடினவேலையன்று. அறுபது நாழிகையும் ஓயாமல் தாங்கவேண்டுவது ஒன்றுமில்லை. நாம் கேட்டுக்கொள்வதெல்லாம் உலகவியற்கைக்கு விரோதமான குணமுடையவர்கள் தமது குணங்களை மாற்றிக்கொள்ளக்கூடுமானால் உலகத்தில் எவ்வளவு நன்மையுண்டாகலாம்? அப்படிக்கு அசாத்தியமாயிருந்தால் அவர்கள் நோயாளிகளண்டைபோய் ஒன்றுகிடக்க ஒன்றுசெய்து கெடுதி விளைப்பானேன்? இதற்குத் தப்பாமலிருந்தால் உலகத்தில் உபாதிகளும் மட்டிட்டு ஜனங்களும் அநேகமாய்ச் சுகமடைவார்களென்று நம்புகிறோம்.

## அன்னப்பறவை.

லண்டன் பட்டணத்துக்கடுத்த தேம்ஸ் ஆற்றங்கரையில் அன்னப்பறவைகள் இப்போது அதிகமாயிருக்கின்றன. அவைகள் அநேகமாய் மச்சங்களை அழிக்கின்றனவென்றெண்ணி, அநேகர் அவைகளை துரத்த முயன்றிருக்கின்றனர். கொஞ்சகாலத்திற்கு முன் அன்னப்பக்ஷிகள் அங்கே வெகு அரிதாயிருந்தனவாம். இப்போது அந்நதிக்கரையிலுள்ள மரங்களினிலைகளை எண்ணுலும் எண்ணலாம், அவைகளை எண்ணிமுடியாது என்று சொல்லுகிறார்கள். நீரிலேயே விளைகிற ஒருவகைத் தானியமும், நீரோரங்களிலிருக்கின்ற பற்பல கோரைகளுமே அவைகளுக்கு ஆகாரம். அவைகளுக்கு மிகவும் ரசமானவுணவு மீன்முட்டைகளே. அவ்வாற்றங்கரையிலுள்ள விருக்ஷங்களநேகம் தழைந்து நீருக்குள்ளாழ்ந்திருக்கும். அக்கிளைகளினுனியில் மீன்முட்டைகள் தோரணம்போல் வரிசையாய்த் தொங்குவதுகண்டு, அந்தப் பக்ஷிகள் வேண்டுமென்று தங்களுக்காகவே அப்படிச் செய்திருப்பதாய் நினைத்து மிகவும் களிப்புற்றிருக்கும். இம்மாதிரி சிறந்த உணவு அவைகளுக்

இல்லாவிட்டால் அவைகளின் இரை சரியாய் ஜீர்ணமாகமாட்டாதென்று சிலர் சொல்லுகிறார்கள். எவ்விதமான உணவாயினும் ஜீரணத்திற்குக் கொண்டுவரும்படியான வல்லமை அப்பக்ஷிகளின் கல்லீரலுக்கு உண்டென்று வேறுசிலர் உறுதியாயுரைக்கின்றனர். ஆயினும் அவைகள் மீன்முட்டைகளை அதிகமாய் அழிக்கின்றனவென்பதுமாத்திரம் வாஸ்தவமே. அதற்காகவே மீன்களில் ஆசைகொண்ட அநேகர் அவ்வன்னங்களைத் தூரத்த வெகுவாய் முயன்றார்கள். அது அசாத்தியமாய்ப் போய்விட்டது. அன்னங்கள் ஒருபோதும் தோல்வியடையத்தக்க பறவைகளல்ல. அவைகள், கப்பல் தள்ளுகிற துடுப்பின்மேலறைந்த அறை அதைப் பிடித்திருந்தவன் கையை ஒரு மணிநேரம்வரையில் ஒன்றிற்கும் உதவாததாய்ச் செய்துவிட்டது. சிலகாலத்திற்குப்பிறகு பறவைகளைக் கூடுகளிலிருக்கும்போது அடித்தவர்களைத் தண்டிக்கும்படி சட்டமேற்பட்டுப்போனபடியால் ஒருவரும் அதன் கிட்டவேபோகக்கூடாமற் போய்விட்டது.

முற்காலங்களில் கூடுகளிலிருந்து பக்ஷிமுட்டைகளை எடுக்கவே கூடாது. இங்கிலீஷ் துரைத்தனத்தாருடைய அடையாளமில்லாமலும் உத்தரவில்லாமலும் அந்தப் பக்ஷிகளைக்கூட வைத்திருக்கக் கூடாது. அப்படி ஒருவர் வைத்திருப்பதை மற்றொருவன் திருடினால் அது பெரும்பிழை. அதற்கு அக்காலத்திலிருந்த தண்டனை என்னவென்றால், அப்படி திருடின பறவை அகப்பட்டால் அதை நேராய் நிமிர்த்திவைத்து அதின் தலையளவு நிரம்பத்தக்க உணவை, திருடினவன் சொந்தக்காரனுக்குக் கொடுக்கவேண்டியது. அப்பறவை அகப்படாவிட்டால் வேறேதாவது ஒன்றை முன்போலவைத்து அப்படியே செய்யவேண்டியது. பூனைகளைத் திருடினாலும் இப்படித்தான் தண்டனை. ஹம்ஸபக்ஷியை ராஜாக்களும் மற்றுமுள்ள பெரியமனிதர்களும் தனவான்களும் விசேஷமாய் வளர்த்துவந்தார்கள். பணங்கிடைக்காத முற்காலத்திலேகூட ஒவ்வொரு பக்ஷியின் விலை இருபத்தைந்து ரூபாய்க்கு அதிகமாயிருந்தது.

அன்னங்கள் ராஜாக்களுக்குரிய பறவைகளேயொழிய வேறல்ல; அதைக் காக்கவேண்டிய வழிகளைப்பற்றி அத்தேசத்தார் ஒருமாதிரி சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை நடத்தவேண்டிய அதிகாரம் சிலபேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு முத்திரைபோடுகிறவிதம் எப்படியென்றால், அவைகள் குட்டியாயிருக்கும்போது பிடித்து, பெரிய பக்ஷிகளுக்குப் போட்டிருப்பதுபோலவே, அவைகளுக்கும் ரக்கைகளில் முத்திரையடித்துப் புத்தகத்தில் பதிவுசெய்துகொள்ளுவார்கள். இப்படியே முத்திரைபோட்ட பக்ஷிகளைக் கணக்கிட்டுவைப்பார்கள். முத்திரையில்லாத பக்ஷியொன்று புதிதாய் அகப்படுமானால் அதையும் உடனே பிடித்து

முத்திரையடிப்பார்கள். ராஜாங்கத்தார்தவிர மற்றெவரும் பிடித்து முத்திரையிடக்கூடாது.

அன்னக்கூடு, குருவிக்கூடுமுதலியவைகளைப்போல அழகானதல்ல. வைக்கோல்களையும் புறகளையும் துரும்புகளையும் குச்சிகளையும் சேர்த்து மொத்தமாய்க் கட்டியிருக்கும். அந்த நதி கரைபுரண்டு வெள்ளமவரும்போது அக்கூடுகளை மேலே தூக்கிக்கொண்டுபோமபடியான சகதியைக் கடவுள் அவைகளுக்கு அளித்திருக்கிறார். மரங்களொன்றும் அடர்ந்திராமல் நன்றாய வெயிலகாயும்படியான வெளிகளிலேயே அவைகள் விசேஷமாய்க் கூடுகட்டுகின்றன. நமக்கு யாதொரு தீங்கு நேராமல் காக்கின்றவர்களிருக்க நாம் எங்கேயிருந்தாலென்னவென்று அறிந்துதான அவைகள் அப்படிச் செய்கின்றனவோ? அக்கூடுகளில் அன்னப்பேடைகள் ஒவ்வொருதடவையிலும ஐந்துக்குக்குறையாமல எட்டுக்கு உயராமல் முட்டையிடும். அம்முட்டைகள் ஒருமாதிரி பசுமைகலந்த வெளுப்பாய் நாலங்குல நீளமிருக்கும். ஒன்றரைமாதத்திற்குப் பிறகு அம்முட்டைகளின் பசுமை நிறம்மாறிக் கொஞ்சங்கொஞ்சமாய் வெளுக்க ஆரம்பிக்கும். தாயன்னமானது அடைகாக்கும் காலமெல்லாம் வெகு ஜாக்கிரதையாய்க் கிட்ட வேறொன்றும் நாடவொட்டாமல் காத்துக்கொண்டிருக்கும். அப்புறம அது குஞ்சு பொரித்து நாளளவில் வெளுத்துவரும். அதன் தாய் தன் குட்டிக்கு நல்ல வெண்மைநிறம் வந்ததென்று கண்டால் அதன்பிறகு ஒரு நிமிஷங்கூட அதைத் தன்னண்டை வைத்திராது. இளமைமுதல் வருந்தினால் அல்லது பிற்காலத்தில் தனக்கு இரைதேடிக்கொள்ளாத திறமிராதென்று உடனே துரத்திவிடும். அப்புறம் அதன் வழியை அது பார்க்கவேண்டியதுதான். அப்போதே அவைகளை இறகை மடக்கிக்கட்டாவிட்டால், அவை ஆகாயத்தில் வெகு தூரம் பறந்துபோய் அங்கிருந்து பூமியெங்கும் ஆராய்ந்துபார்த்துத் தனக்கு எந்தவிடம் நல்லதாயும் ரம்மியமாயும் மிக்க இரைகிடைக்கத்தக்கதாயும் தென்படுகிறதோ அவ்விடம்போய்ச்சேர்ந்து அங்கே யாதொரு தீங்குமில்லாவிட்டால் நெடுநாள் அங்கேயே குடிபுகுந்திருக்கும். அதன் தாயன்னமும் தனக்குத்தக்கதான ஆணன்னத்தைத்தேடி அதனுடன் களிப்புற்றிருக்கும்.

அன்னப்பறவை நெடுநாள் ஜீவித்திருக்கும். சில முன்னூறு வருஷம்வரையிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அத்தேசத்தார் ஐம்பது அறுபது வருஷத்திற்கு அப்பறவைகளைக் குத்தகைக்கு விட்டு வைப்பதுண்டு. அம்மாதிரி அநேகர் வளர்த்து எழுபது எண்பது வருஷம் அவைகள் பிழைத்திருக்கக் கண்டிருக்கிறார்கள். முன் எங்கிலாந்தில் அரசாண்டுகொண்டிருந்த ராஜாத்தியொருத்தி இவ்வழகிய பக்ஷியொன்றை வளர்த்தாள். அது ராஜசபைகளில் வந்து

விநோதமாயிருப்பதில் மிகவும் விருப்பமுள்ளது. அதன் தைரியமும் பலமும் வியக்கத்தக்கதாயிருந்தது. ஆற்றுவெள்ளத்தில் எவ்வளவு பெரிய பதார்த்தத்தைத் தள்ளிவிட்டாலும் அதை எடுத்துக் கொண்டுவராமல் திரும்பாது. அவ்வளவுவலிமை சிறந்த நாய்களுக்குக்கூடக் கிடையாது. கடையில் ஒரு பெரிய வாத்துப்படையோடு தானொன்றாய் எதிர்த்து இறந்துபோயிற்றாம்.

ஒரு ஹம்ஸம் தினந்தோறும் தன் எஜமானன் வீட்டுக்கு வரவேண்டிய காலந்தப்பாமல் கிரமமாய் வந்துகொண்டிருந்தது. ஒருநாள் வரவில்லை; என்னவென்று போய்ப்பார்த்ததில், தெருவில் ஒருவன் வைத்துக்கொண்டிருந்த தின்பண்டத்தை அடித்துப் பிடுங்கிக் கொண்டு ஆற்றின் நடுவில் உட்கார்ந்து ஒருமாதம்வரையில் அவ்விடத்தைவிட்டு வாராமல் அங்கேயே வாழ்ந்திருந்ததாம்.

மேலும் அவைகள் தமது கூடுகளையுயர்த்தும் விதங்களைச் சிலர் சொல்ல யாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவைகளின் முன்னறிவைக் கேட்டால் யாவரும் அதிசயிக்கத்தக்கதாயிருக்கும். இதற்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு. அன்னப்பேடொன்று தனக்குக் கூடுகட்டிக்கொண்டு ஐந்தாறு முட்டையிட்டுப் பெரிய சம்சாரியாயிருந்தது. அதற்குத் தன் பக்கத்திலிருந்த அன்னங்களிடத்திலெல்லாம் மிக்கநேசமுண்டு. அதை மற்றவைகளெல்லாம் மேலாய் மெச்சிக்கொண்டிருந்தன. ஒருநாள் அது மிக்க அவசரத்துடன் புல்பூண்டு செத்தை குச்சிமுதலிய சாமக்கிரிகளைக் கொண்டுசேர்த்துத் தன் கூட்டை முன்னிருந்ததைவிட இரண்டரை அடி உயர்த்திற்று. அன்றையதினம் ராத்திரி பெருமழைபெய்து அவ்விடத்தில் வெகு சேதம் நேரிட்டது. அந்தத் தீர்க்கதரிசியான அன்னப்பறவைமாத்திரம் தன் குஞ்சுகளுடன் அந்த வெள்ளத்தின் மேல் நின்றுகொண்டிருந்தது. இப்படி மனிதர்க்கு அசாத்தியமான செயல்களை அவைகள் செய்கின்றன. ஆதலால் செயற்கையறிவைப்பார்க்க இயற்கையறிவே மிக்கதென்னலாம்.

இது இப்படியிருக்க, காமமஞ்சரியின் இளையதங்கையான ராகமஞ்சரி என்பவள், ஒரு விநோதசாலையில் பாடப்போகிறு ளென்று ஜனங்கள் அநேகமாய்ச் சேர்ந்தன. நானும் என் தோழனு டன் அவ்விடத்திற்குச் சென்றேன். அவ்வழகி ஆட்டத்திற்கு ஆரம்பித்தபோதே, என்மனதை இடங்கொண்டாள். அக்குமரி யா வரும் பார்த்துப் பதுமைபோல் தயங்கிநிற்கும்படி கொஞ்சநேரம் சங்கிதநாட்டியங்களை நன்றாய் நடத்திப்போமளவில், நகரத்தைக் கொள்ளையாடினநிமித்தம் என்மேற் கோபங்கொண்ட நகரதேவ தைபோல், தன் கடைக்கண்பார்வையாகிற பாசத்தால் என்னை இறுகக்கட்டினுள். விநோதத்தினுலோ, அல்லது ஆசையாலோ, அல்லது தற்செயலாயோ, நானறிகிலேன். தன் அருகிலிருந்த தோ ழிகளுக்கும் தெரியாமல் என்னை ஒருவகையாய் நோக்கிப் புன்ன கைநகைத்து, அங்கடைந்திருந்த ஜனங்களின் கண்களும் மனமும் ஆசையோடு பின்தொடரப் புறப்பட்டுப்போயினள்.

நானும் இல்லஞ்சேர்ந்து அவள்மேல் ஆசைகொண்டிருக்கை யில், அதிவல்லவனுன என் நண்பன் ஏகாந்தத்தில் ஒன்று உரைத் தான். அதாவது: அந்த ராகமஞ்சரி மகா பாக்கியசாலி; நீ கூட அவள்மேல் இப்படி ஆசைகொண்டிருக்கும்படியாயிற்றன்றோ! அவள் உட்கருத்தையும் நான் நன்றாய் ஆராய்ந்துபார்த்தேன். அவள் மனம் உன்னிடத்தில் நன்றாய்ப் பற்றியிருக்கிறது; ஆயினும் ஒருவருத்தமிருக்கிறது: அக்கன்னிகை தன் குலாசாரத்தைவிட்டு, நான் குணமுள்ளவனைக் கைபிடிப்பேனேயல்லது பொருளுள்ளவ னைப்பிடியேன். விவாஹமில்லாமல் ஒருவனும் என்னைத் தொடக்கூ டாதென்று வெகு சிறந்த எண்ணத்தோடு உரைத்தாள். அவள் தமக் கையான காமமஞ்சரியும் தாயான மாதவசேனையும் அதைப் பல வாறு தடுத்தும் அவள் உடன்படாமையால், கண்ணீர் மாலைமாலை யாய்ப் பெருக அரசனிடஞ்சென்று, மஹாராஜனே! ரூபலாவண்ணிய முதலிய எல்லாகுணங்களும் நிறைந்த உம்மடியாளான ராகமஞ்சரி யானவள் எம்மனோரதத்தைப் பூரிப்பளென்று எங்களுக்குப் பேரா சையுண்டாயிருந்தது; இப்போது அது வேரற்றுப்போயிற்று. ஏனெ னில், இவள் இயற்கையான தன் குலாசாரத்தைவிட்டுப் பொரு ளைக்கோராமல் குணத்திற்கே தன் வயதை விற்கப்போகிறுளாம். இது குலமகளிர் செயலன்றோ? வேசிகளுக்கு உரியதன்று. அவள் எங்களுரையை மதிக்கவில்லை. தாங்களாவது நற்புத்திபோதிப்பீர்க ளென்று நம்பிவந்தோம் என்று சொல்ல, அவன் அவளை அழைத்து வெகுவாய் நல்வார்த்தைசொல்லியும் அவையெல்லாம் காட்டிலே காய்ந்த நிலவாய்விட்டது. அது தெரிந்து அவள் தாயும் தமக்கை யும், எங்களுத்தாவின்றி இவளை மயக்கிக்கெடுப்பவன் திருடன்போ லத் தண்டனைக்கு உரியனுகவேண்டும் என்று அரசனை வேண்டிக் கொண்டிருக்கிறுர்கள். பொருளில்லாமல் அவர்கள் சம்மதப்ப

டமாட்டார்கள். பொருளுடையாளை அம்மகள் அணுகாள். இவ்விஷயத்தில் கொஞ்சம் யோசிக்கவேண்டுமென்றான்.

அதற்கு நான், 'இதற்கு யோசிப்பானேன், ஏகாந்தமாய்ப் பொருள்கொடுத்து அவர்களை வசப்படுத்துகிறேன். குணங்களால் அக்கன்னிகையை நயப்படுத்துகிறேன், என்று சொல்லி அதன்படியே காமமஞ்சரியின் அந்தரங்கத்தோழி ஒருத்தியை அழைத்து அவளைக்கொண்டு, நீ உன் உடன்பிறந்தாளை எனக்குக் கொடுப்பாயாகில், உதாரகனிடத்திருக்கும் பணப்பையைப் பறித்துக்கொடுப்பேனென்று காமமஞ்சரியைக் கேட்டதற்கு அவள் சம்மதிக்க, அவ்வாறே அப்பையை அவளுக்குக்கொடுத்து ராகமஞ்சரியைப் பாணிக்கிரகணஞ்செய்துகொண்டேன். என்றையத்தினம் அந்தப்பை களவுபோனதாய் வதந்தியுண்டாயிற்று; அதற்குமுன்னமே ஏதோ ஒரு சாக்கிட்டு அழைப்பித்திருந்த ஜனங்களெல்லாரும் கேட்டுக்கொண்டிருக்க, அர்த்தபதியின் அடிமைபோல் வெளியில்காட்டிக்கொண்டு எனக்கு இஷ்டனாயிருக்கின்ற விமர்த்தகன் என்பவன், தனமித்திரனை அலக்ஷியஞ்செய்து வெகுவாய் வெருட்டினான். அதற்கு தனமித்திரன் அப்பா! உனக்கு ஏதுகாரியம்? அயலானுக்காக அதிகமாய் ஏன் இரைகிறாய்? உன் விஷயத்தில் நான் அபகாரஞ்செய்ததாய் ஒன்றும் மனதிற்றோற்றவில்லை என்ன, அவன் மறுபடியும், 'இதுதான் தனுகங்காரமென்பது; பொருள்கொடுத்துவாங்கிய பிறன்மனைவியை, மறுபடி அவள் தாய்தந்தையர்களைப் பணங்கொடுத்து ஆசைமூட்டித் தட்டிக்கொண்டுபோகலாமென்று நினைக்கிறாய்; இவ்வளவு கெடுநினைவுகொண்டிருக்க, நான் உனக்கு என்ன அபகாரஞ்செய்தேனென்று வாயினாற் பிதற்றுகிறாய்; மகா தனிகனான அர்த்தபதிக்கு விமர்த்தகன் வெளியேவந்து விளையாடும் உயிர் என்பது கேள்வியில்லையோ? அவனுக்காக நான் உயிரையும் விடுவேன். அவனுக்காக பிரமஹத்திவந்தாலும் இஷ்டமே; உனக்கு இந்தச் சர்மரத்தினத்தாலுண்டான அகங்காரம் நீங்க எங்கேனுஞ்செல்லும். யான் ஓர் இரவு கண்விழித்தால் போதாதா? என்று இரைந்துபேசுவதைக்கேட்டு, அங்குவந்திருந்த பெரியோர்கள் விலக்கி இருவரையும் சமாதானப்படுத்தியனுப்பினார்கள்.

தனமித்திரன் மிகவருத்தமுற்றவன்போல நடித்து முதலில் சர்மரத்தினம காணாமற்போனதையும், அதற்குமுன் நடந்த இச்செய்தியையும் அரசற்கு அறிக்கையிட்டான். அவன் அர்த்தபதியை ரகசியமாய் அழைப்பித்து, விமர்த்தகனென்று ஒருவன் உன்னிடத்திலிருக்கிறானோவென்று கேட்க, அவன் தெரியாமையால், ஆம், இருக்கிறான். அவன் எனக்கு உயிர்போன்றவன்; இப்போது அவனாலென்ன? என்றதற்கு அரசன், அவனை இப்போது இங்கே வரவழைக்கக்கூடுமோவென்று வினவ, இதோ அழைத்துவருகிறேனென்று போய், தன்வீட்டிலும், வேசிவீட்டிலும், சூதாடுமாங்

திலும் கடைத்தெருவிலுமாய் எங்கும் நன்றாய்த் தேடியும் அவனைக்
கண்டுபிடிக்கவில்லை. அவன் எப்படி அகப்படுவான்? அன்றைய தி
னமே நான் அடையாளஞ்சொல்லி உன்னைத் தேடும்படி உஜ்ஜயினி
நகர்க்கு அனுப்பிவிட்டேனே. அர்த்தபதி முழுதும் திரிந்துபார்த்து
அவனைக் காணமல், அவன் செய்தகுற்றம் தன்னைச்சேர்ந்ததா
னென்று மோஹத்தினலோ பயத்தினலோ ஒதுங்கியிருக்க, மறுபடி
தனமித்திரன் போய்த் தூண்டினதனல், அரசன் கோபங்கொண்டு
விலங்குபோட்டுச் சிறையிலடைத்தான்.

அந்தப் பையைப் பெற்றுக்கொண்ட காமமஞ்சரியும் அதினி
ன்றும் அநேகம் பொருள் அடையலாமென்கிற பேராசையால்
தன்னிடத்தில் ஒரு திருணங்கூட வைத்திராமல் தானம்பண்ணி
னள். அதுதெரிந்து நான் தூண்டிவிட, தனமித்திரன் அதிகாரி
யிடம் சென்று, காமமஞ்சரி என்னும் வேசி, அதிகலோபகுணத்தி
னல் லோபமஞ்சரி எனப் பேர்படைத்திருந்தாள். அவள் இப்
போது உரல் உலக்கைமுதற்கொண்டு அலக்ஷியமாய்த் தானஞ்
செய்கிறாள். அதைப்பார்த்தால் என்னுடைய தோற்பையைக்
கைக்கொண்டாளென்று தோன்றுகிறது. வேசிகளுக்காவது வர்த்
தகர்களுக்காவது பொருள்கறந்தால் மறுபடி மற்றவர்களுக்குக்
கறவாதென்பது அதன்மகிமை; ஆதலால் அவளிடத்தில் எனக்கு
ஐயமிருக்கின்றதென்றான்.

உடனே அந்த ராஜன், காமமஞ்சரியையும் அவள் தாயையும்
பிடித்துவரும்படி கட்டளையிட, நான் ஏகாந்தமாய் அவளண்டை
போய், வெகு விசனமுற்றவன்போல், அம்மா நீ உன்னிடத்திலு
ள்ள பொருளனைத்தும் செலவுசெய்தமையால் உன்னிடத்தில் சர்
மாத்தினமிருக்கிறதென்று தெரிந்து அதை விசாரிக்கும்பொருட்டு
இப்போது அரசன் உன்னை அழைப்பிக்கிறான். உன்னை நிர்ப்பந்
தப்படுத்தி அது உன்னிடம் வந்தவிதம் என்னவென்று கேட்டால்,
நீ தப்பாமல் நானே கொண்டுகொடுத்ததாய்ச் சொல்லப்போகிறாய்,
பின்பு எனக்குச் சித்திரவதை உண்டாகுமென்பதற்குச் சந்தேக
மில்லை. நான் இறந்ததுகேட்டால் உடனே உன் தங்கை உயிர்விடு
டுவாள். நீயும் உன்னிடத்திருந்த பொருளனைத்தையும் தானங்
கொடுத்து வெறுங்கையாயிருக்கிறாய். சர்மாத்தினமும் தனமித்தி
ரனையே போய்ச் சேரப்போகிறது. ஆதலால் இப்போது நேரிட்டி
ருக்கிற துன்பம் எப்புறத்தும் அநர்த்தத்தை விளைப்பதாயிருக்
கின்றது. இதற்குச் செய்யவேண்டுவதென்ன? என்று கேட்டத
ற்கு, அந்தக் காமமஞ்சரியும் அவள் தாயும் கண்களில் நீர் தாரை
தாரையாய் வழிய, நீர் உரைத்தது உண்மையே. எங்களுடைய
அறியாமையால் நமது ரகசியம் பிரசித்தமாயிற்று. அரசன் உறுத்
திக்கேட்கும்போது அதைக் கொடுத்தவர் நீரென்று சொன்னல் எம
து குலம் நிர்மூலமாய்ப்போம்; ஆதலின் இப்பழியை அர்த்தபதி

யின்மேற் போடவேண்டும். அவனுக்கு எங்களிடத்தில் போக்கு வரவு உண்டென்று முன்னமே பட்டணத்தில் கூச்சல்கிளம்பியிருக்கின்றதே. அவனே கொணர்ந்துகொடுத்ததாய் அரசற்கு அறிக்கை செய்கிறோம் என்றுசொல்லி ராஜசபைக்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

போனவிடத்தில் நியாயாதிபதி, அநியாயமாய்ப் பொருள் பிடுங்குவது வேசிகளுக்குத் தருமமோ? நியாயமாய்க் கொடுத்தால் வாங்கிக்கொள்ளலாம். ஆதலின் இப்போது நீங்கள் செய்த அநீதிக்காக உங்கள் காதுகளையும் நாசிகளையும் அறுக்கவேண்டுமென்பதற்கு, அவர்கள் அர்த்தபதி எங்கள்கையில் கொடுத்ததுதான் நாங்கள் அறிவோம், மற்றொன்றும் எங்களுக்குத் தெரியாதென்றார்கள். அதுகேட்டு அரசன் கோபங்கொண்டு அவனை உயிர் வாங்கும்படி உத்தாவுசெய்தான். அதுகேட்டு என்தோழனான தனமித்திரன் ராஜசமுகத்திற்குவந்து, மகாராஜனே! வர்த்தகர்களுக்கு ஒரு வரமுண்டு. இச்சாயலான பிழைசெய்தால் உயிர் வாங்குவது நியாயமன்று. அரசன் அதிகமாய்க் கோபங்கொண்டால் அரைத்துணியும் உரித்துக்கொண்டு கண்காணமல் காட்டில் துரத்திவிடலாம் என்று நல்லதனமாய்ச்சொல்லி அர்த்தபதிக்கு நேருவதாயிருந்த கொடிய தண்டனையை நீக்கினான். அதனால் அவனுக்கு அந்நகரமெங்கும் பெரும்புகழ் உண்டாயிற்று. அரசனும் அவ்வாறே அர்த்தபதியை அரணியத்தில் ஓட்டிவிட்டான். நானும் என் இஷ்டப்படி ராகமஞ்சரியைப் பாணிக்கிரகணம்செய்து லோபிகளிடத்திலிருந்து பொருளைப்பறித்து வறியர்களுக்குக் கொடுத்து அந்நகரத்தார் அனைவரையும் ஒரேநிலையில் வைத்துக்கொண்டிருந்தேன். அதனால் முன் தனிகர்களாயிருந்தவர்களெல்லாம் ஏழையாயிருந்தவர்களிடத்தில் யாசிக்கும்படி நேர்ந்தது.

எவ்வளவு வல்லவனாயினும் தலையிலெழுதின எழுத்தை அழிக்க வல்லவனல்லன். ஒருநாள் நானும் என் நாயகியும் மதுபானம் பண்ணி விநோதமாயிருக்கையில், நான் அதிக மயக்கங்கொண்டு, அவள் என் காலில்வீழ்ந்து ஆணையிட்டு வெகுவாய்த் தடுத்தும் அவையொன்றையும் மதியாமல், அப்பட்டணத்திலுள்ள பொருள்களையெல்லாம் ஒரோராத்திரியில் கொள்ளையாடிக்கொண்டுவந்து அவள்வீட்டை நிரப்பவேண்டுமென்று, கட்டுத்தறியை முறித்துக்கொண்ட யானைபோல் ஒரு தடைக்கும் உட்படாமல், ஒரு கத்திமாத்திரம் கையிலேந்தி சிருங்காலிகை என்னும் ஒரு தோழி பின் தொடர்ந்துவர ஓடினேன். அதுகண்டு திருடனென்று பலர் எதிர்த்துவந்தும் அவர்மேல் கோபங்கொள்ளாமல், மதிமயக்கத்தால் வேடிக்கையாய்க் கத்தியைச் சுழற்றி இரண்டுமூன்றுபேரை அடித்துக் கடைசியில் கண்சுழலமிட்டுக் கால்தள்ளாடிக் கீழே வீழ்ந்தேன். அதுகண்டு என்னுடன்வந்த சிருங்காலிகை அழுதுகொண்டு ஓடிவிட்டாள். அவர்கள் என்னைப்பிடித்துக் கட்ட ஆரம்

பித்தனர். அப்போது திடீரென்று எனக்கு அறிவுண்டாகி நமக்கு என்ன விபத்துவந்தது பார்ததையா! என்று கொஞ்சநிதானித்து அக்காலத்தில் தோன்றியபடி ஒருவழி யோசித்தேன். நம்முடைய அறியாமையால் இப்படிப்பட்ட துன்பம் நேரிட்டது. நாம் குற்றஞ்செய்திருக்க நம்மைத் தோழனுக்கிக்கொண்ட தனமித்திரனையும், நம்மைக் கலியாணஞ்செய்துகொண்ட ராகமஞ்சரியையும் நாளைக் காலையில் பிடித்துக்கொண்டுபோய்விடுவார்களே; ஆதலின் இப்படிச் செய்தால்தான் அவர்களும் மீருவார்கள். இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்திலிருந்து நம்மையும் நீக்கமுயலுவார்கள் என்று ஒருமாதிரி யோசனை செய்து அதைச் சிருங்காலிகையோடு உபாயமாயுரைத்தேன். கிழக்குரங்கே அப்புறம்போ, என்னெதிரில் நில்லாதே, பொருளாசைகொண்ட பாதகியான ராகமஞ்சரியை, நமக்குச் சர்மாத்தினமாகிற நிதியிருக்கிறதென்று மதங்கொண்டு, எனக்கு நேசனாய் நடித்துவந்த என் பகைவனை தனமிததிரனோடு கூட்டினையே. அதன் பயனை இப்போது அநுபவிக்கிறாய், அப்பாதகனது பையையும் உன் மகளின் மணியையும் திருப்பிக் கொடுப்பேனென்று சொப்பனத்திலும் நினையாதே. எனக்கென்ன வந்தகெடுதி? இதோ உயிரிழக்கச் சித்தனாயிருக்கிறேனே என்றேன். அவள் அந்தச் சூதை அறிந்துகொண்டு என்னைப் பிடித்திருந்தவர்களண்டைவந்து, அப்பா குழந்தைகாள்! ஒரு நிமிஷம்பொறுங்கள். என்சொத்து எங்கே வைததிருக்கிறானென்று கேட்டறிந்துகொள்கிறேன் என்று கேவிக்கேவி அழுதுகொண்டு வெகு விசுவாசத்துடன் நல்வார்த்தையாய் வேண்டினாள். அவர்கள் அதற்குச் சம்மதிக்கவே அந்தக் கிழவி என்னண்டைவந்து ஐயா! நான் செய்தபிழையைப் பொறுக்கவேண்டும். உன் பெண்டைப் பிடித்த தனமித்திரன் உனக்குப் பகைவனே. ஆயினும் வெகுநாளாய் அந்த ராகமஞ்சரி உன்னிடத்தில் செய்துவந்த உபசாரத்தைநோக்கி அவளிடத்தில் கிருபைபண்ணி அவள் நகையைத் திருக்குமிடத்தை இயம்பவேண்டுமென்று என் தாள்களில வீழ்ந்தாள். அதன்மேல் நான் அவளிடத்தில் தயைகொண்டு, பிராணன் போகிறகாலத்தில் இவளோடு நமக்குப் பகையென்னவென்று அதைச் சொல்லுகிறவன்போல ஏகாந்தமாய் அவள்காதில், இப்படி இப்படி நடக்கவேண்டுமென்று மேலே செய்யவேண்டிய காரியங்களை உபதேசிததேன். அவளும் அச்செய்தி தெரிந்துகொண்டு அனைவர்க்குங்கேட்க, அப்பா! நீ நெடுநாள் வாழ்ந்திருக்கக்கடவாய்; தேவதைகள் உன்னிடத்தில் கிருபைசெய்யவேண்டும். இவ்வங்கதேசத்தரசனும் உன்னிடத்தில் பிரீதி உண்டாகி நன்மைபயக்கவேண்டும். இவர்களும் பெருமனதாய் உன்னைவிட்டுவிடவேண்டும் என்று ஆசீர்வதித்துப்போயினாள். அங்கிருந்த காவற்காரரும் என்னைப் பிடித்துச் சிறையிலடைததார்கள்.


மறுநாள்காலையில் என்னை விசாரணைசெய்யும்படி ஒரு அதிகாரி வந்தான். அவன் அப்போதுதான் புதிதாய் அதிகாரம்பெற்றுத்தான் தக்கவயதும் அதற்கேற்ற அழகுமுடையனாய் அதற்கு இயைந்த அதிகாரமும் பெற்றானென்று அகங்காரமடைந்திருந்தான் அவன் தேஹத்தின் அழகுபற்றியே காந்தகன் எனப் பெயருண்டாயிற்று. அவன் அன்றையதினம் அந்த ராஜசபைக்குவந்து என்னைநோக்கி, அடா! நீ தனமித்திரனுடைய தோற்பையையும் இன்னும் பலவிடங்களில் கொள்ளையாடின பொருள்களையும் கொடாமற்போனால் இன்னும் கொஞ்சநாழிகையில் பலவிதமான சங்கடங்களும் அநுபவித்துக் கடைசியில் மிருத்துமுகத்தையும் பார்க்கும்படி நேரிடுமென வெருட்டினான். அதுகேட்டு நான் புன்னகை நகைத்து, ராஜனே! நான் பிறந்ததுமுதல் கொள்ளையாடின பொருள்களனைத்தையும் கொடுத்துவிட்டாலும் விடுவேன், அர்த்தபதியின் மனைவியைப் பறித்துக்கொண்டு எனக்கு மித்திரனென்று நடித்துவருகிற என் சத்துருவான தனமித்திரனுக்குத் தன் பையை மறுபடி அடையலாம் என்னும் ஆசையை ஒருபோதும் நிறைவேற்றமாட்டேன். அதைக் கொடாமலிருப்பதற்காக எதுநேர்ந்தாலும் நேரட்டும்; அநுபவிக்கக் காத்திருக்கிறேன் என்று சொன்னேன். அதற்காக நாள்தோறும் அவர்கள் என்னை லகுவும் பிகுவுமாய் வேண்டிக்கொண்டிருந்தார்கள். நானும் அவர்களுககு உடன்படாமல் அங்கேயே சுகமாய் வஸித்துக்கொண்டிருந்தேன். (இன்னும் வரும்.)

## சமாசாரம்.

பிரின்ஸ்ப்வேல்ஸ் என்னும் நமது இளவரசர்.— சென்னையைவிட்டுச் சென்றபிறகு வட இந்துஸ்தானத்தில் கல்கத்தாமுதல் காச்மீரம் நேபாளம் வரையில் சீரோங்கி விளங்குகின்ற பட்டணங்களுக்கு ஒன்றொன்றாய் விஜயம்செய்துவருகிற ஆரவாரம்தான் இந்தமாதததில் முக்கியமான சமாசாரம். போகுமிடமெல்லாம் ஊர்கோலமும், விருந்தும், தீபாலங்காரம் கிதமுதலான வேடிக்கையும் மிகு சம்பிரமமாய் நடந்தேறிவருகின்றன. சுதேச கிரீடாதிபதிகளும், அவர்களுடைய பரிஜனங்கள், ரதகஜதுரகபதாதிகளுடன் திரளாகச்சேர்ந்துவந்து இளவரசனை உபசரிப்பதும், அந்த மகாப்பிரபு சரசமான மொழிகளாலும், புன்சிரிப்பாலும் யாவரையும் மனங்குளிரச் செய்வதும் முன் எப்பொழுதும் காணாதகாட்சியாகையால் அதை எண்ணிறந்த பிரஜைகள் கூடிவந்துபார்த்து வியக்கின்றார்களாம்.

இப்படி ஜாதி, தேசம், சமயம், பாஷை வேஷம்முதலிய பேதங்களைப் பாராட்டாமல் நாநாவகுப்பாரும் ராஜபக்தியுடன் மனம் ஒருங்கொத்து கூடியகாட்சி நமது வாழ்நாவில் மிகு மாட்சிமைபொருந்திய ஒரு விசேஷந்தான்.

Printed at the C. K. S. Press.



TOWN HALL, BOMBAY

பம்பாய் நகரம்.